## அத்தியாயம் 22

ஒரு வழியாக கும்பாபிஷேகம் முடிந்து எல்லாரும் சென்னையை நோக்கி பயணித்து கொண்டிருந்தனர். அபிராமியும் கண்ணனும் வினுவுடன் ஃப்ளைட்டிலேயே சென்றுவிட கீதாவும் வருணும் அவர்கள் நண்பர்களுடன் ட்ரையினில் பயணித்து கொண்டிருந்தனர்.

வருணின் கஸின்ஸ் இன்னும் ஒருவாரம் ஆச்சியுடன் இருந்து விட்டு வருவதாக கூற, அவன் அவினாஷ், விக்னேஷ் , ஜேசியுடன் இணைந்து கீதாவுடன் பொதிகை எக்ஸ்பிரஸிலேயே வந்து கொண்டிருந்தான்.

அவன் முகத்தில் சோகம் டன் கணக்கில் வழிய, கீதா ஒரு கட்டத்தில் கடுப்பானாள்.

" இப்போ எந்த கப்பல் கவுந்துடுச்சுனு நீ இப்பிடி சோகமா வர்ர வருண்??" என்று கேட்க வருண் அதற்கு பதிலளிக்காது சோகத்துடன் திரும்பி கொண்டான்.

அதில் இன்னும் கடுப்பான கீதா " ஏய்! அவனை என்னனு கேளுங்கடா! இப்போ என்ன, இன்னும் ஒரு வருஷம் கழிச்சு தான் கல்யாணம் பண்ணனும்னு ஆச்சி சொன்னாங்க! அதுக்கு இவன் இப்பிடி தேவதாஸ் மாதிரி நடந்துக்கிறது எனக்கு கடுப்பா இருக்கு அவி" என்றாள் அவினாஷை பார்த்த படியே.

அதில் அமைதி கலைந்த வருண் " இதுக்குலாம் காரணம் அந்த ஜோசியகாரர் தானே! அவரு மட்டும் என் கைல கெடச்சா .." என்று பொங்கியவனை இடை மறித்த ஜேசி "ஒன்னும் பண்ணிருக்க மாட்டிங்க டாட்! விடுங்க., நமக்கு அவ்ளோ சீன் இல்ல" என்று அவனை காலை வாரி விட்டான்.

வருண் அவனை நீயுமாடா என்று பார்த்து வைக்க விக்னேஷ் " மச்சி! எதுக்கு பெரியவங்க மனசை கஷ்டபடுத்தி ஒரு கல்யாணத்தை பண்ணிக்கனும்?? ஒரு வருஷம் தானேடா! கண் இமைக்கிறதுக்கு முன்னாடி ஓடிப் போயிடும்" என்று அவன் பங்குக்கு சமாதானப் படுத்தினான்.

ஸ்ரீதேவி " மாமனாரே! கொஞ்சம் சிரிங்களேன்! ப்ளீஸ்" என்று அவனை பார்த்து செல்லமாக கெஞ்ச வருண் சிரித்துவிட்டான்.

" உங்களை எல்லாம் வச்சிட்டு ஒன்னும் பண்ண முடியாது பக்கிங்களா!" என்று சொல்லிவிட்டு மீண்டும் அழகாக புன்முறுவல் பூத்தான். அதை பார்த்ததும் தான் கீதாவிற்கு அன்றைய நாள் அர்த்தமுள்ளதாக தோன்றியது..

..........................................................................................................................................

திருநெல்வேலியிருந்து சென்னை திரும்பியவர்கள் அவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப அபிராமியும் கண்ணனும் வினுவுடன் யூ.எஸ் திரும்பினர்.

முன்பு போல கீதா, ரியா, யோகா மட்டும் வீட்டில் இருப்பதால் ஏனோ வெறுமையை உணர்ந்தனர். வினு இருந்தால் ஏதாவது கலாட்டா செய்து கொண்டு இருப்பான். அபிராமி கண்ணன் இருந்த போது ஒரு பாதுகாப்பான குடும்ப அமைப்பை உணர்ந்தவர்கள் இப்போது அவர்கள் மூவரையும் ரொம்பவே மிஸ் செய்தனர்.

இத்தனைக்கும் அபிராமி வினுவுடன் தினமும் ஸ்கைப்பில் அவர்களுடன் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்.

வருணும் தன்னுடைய வேலையில் பிஸியாகி விட்டதால் திருமணம் தள்ளி போன கவலையிலிருந்து சிறிது சிறிதாக வெளிவந்து கொண்டிருந்தான். அவனுடைய கஸின்ஸ் சென்னை திரும்பவே அவன் பழைய படி அவனுடைய வேலைகளை செய்ய ஆரம்பித்தான்.

ரியா மட்டும் அஜியை நினைத்து வருந்தினாள். அவளிடம் முந்தைய தினம் பேசியவன் சரண்யாவுடனான தன்னுடைய காதல் விஷயத்தில் அவள் பேச்சை தான் கேட்டிருக்க வேண்டும் என்று சொல்லவே ரியாவுக்கு அதை நினைத்து அவர்களுக்குள் ஏதும் பிரச்சனையாக இருக்குமோ என்ற கவலை.

அவினாஷிடம் கேட்டதில் அவன் அப்படி ஏதும் இருப்பதாக தனக்கு தோன்றவில்லை என்று கூறினாலும் அவளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அஜி என்றால் அவளுக்கு அவ்வளவு பிடிக்கும். இருவரும் மிகவும் நெருங்கிய நண்பர்கள். அவர்கள் இடையில் இடைவேளி வந்தது அஜி சரண்யா காதலுக்கு பிறகு தான்.

அவினாஷும் ரியாவும் எவ்வளவோ எடுத்து கூறியும் அஜி அதை கண்டுகொள்ளவில்லை. அவனது காதல் கண்மூடித்தனமாக சரண்யாவை

நம்ப வைத்ததால் அவன் மற்றவர்களின் பேச்சை பெரிதாக எண்ணவில்லை. இப்படிபட்டவன் தன்னிடம் இவ்வாறு பேசியது ரியாவை யோசிக்க வைத்தது. அந்த யோசனையுடன் அன்று ஆபிஸ் கிளம்பி சென்றாள்.

.................................................................................................................................

அன்று  அனு கொஞ்சம் தாமதமாக எழுந்து விட்டாள்.  அவசர அவசரமாக கல்லூரிக்கு தயாரானவள் ஸ்கூட்டியை எடுத்து கொண்டு கிளம்பினாள்.

செல்லும் வழியில் சாலையின் ஓரத்தில் ஒரு காரை சுற்றி கூட்டமாக மக்கள் நிற்பதை பார்த்தவள் என்னவாக இருக்கும் என்று ஸ்கூட்டியை ஓரங்கட்டினாள். கூட்டத்தை விலக்கியபடி கண்ணாடி வழியே பார்த்தவள் அங்கே தலையில் இரத்தகாயத்துடன் மயக்கத்திலிருந்த அஜியை கண்டதும் அதிர்ந்தாள்.

" இது ரியா அண்ணியோட ஃப்ரெண்ட்ல, இவன் எப்படி இங்க?"என்று யோசித்தவாறே அங்கிருந்தவர்களை உதவிக்கு அழைத்து அவினாஷ் ஏற்கேனவே கொடுத்த  ஆம்புலன்ஸ் நம்பருக்கு  கால் செய்தாள். அதற்குள் பிரியாவுக்கு கால் செய்தவள் அவள் அங்கே வந்ததும் ஸ்கூட்டியை அவளிடம் ஒப்படைத்து விட்டு ஆம்புலன்ஸ் வந்ததும் அதில் அஜியுடன் ஏறிக் கொண்டாள்.

அதற்குள் அவினாஷுக்கு கால் செய்யவே அவன் தான் ஹாஸ்பிட்டலில் தான் இருப்பதாகவும் அவர்கள் வந்ததும் சிகிச்சையை ஆரம்பித்து விடலாம் என்றும் கூறினான்.

ஹாஸ்பிட்டல் வந்ததும் ஆம்புலன்சில் இருந்து அஜியை ஸ்ட்ரெச்சருக்கு மாற்றியவர்கள் அவினாஷ் கூறியவுடன் அவனை ஐ.சி.யு விற்கு கொண்டு சென்றனர். வெளியே டென்சனுடன் கண்ணாடியை வெறித்தபடி நின்றாள் அனு...

ஒரு மணிநேரம் கழித்து வெளியே வந்த அவினாஷ் அனுவிடம் சென்று "அஜிக்கு ஒரு ப்ராப்ளமும் இல்ல அனு. ஸ்டீயரிங் வீல்ல ஹெட் மோதுனதால சின்ன இஞ்சுரி., நார்மல் வார்டுக்கு இப்போ ஷிஃப்ட் பண்ணிடுவாங்க! ஒன் டே ட்ரிப்ஸ் ஏறுனதும் வீட்டுக்கு அனுப்பிடலாம்" என்று சொன்னதும் தான் அவளுக்கு மூச்சே வந்தது.

தானே அவனுடன் இருந்து டிரிப்ஸ் ஏறும் போது பார்த்து கொள்வதாகவும் ரியாவை தொல்லை செய்யவேண்டாம் என்றும் அவினாஷிடம் கூறிவிட்டு நார்மல் வார்டுக்கு மாற்றப்பட்ட அஜிக்கு டிரிப்ஸ் ஏறுவதை பார்த்து கொண்டே போனை நோண்டிக் கொண்டிருந்தாள் அனு.

அவள் தலைக்குள் ஆயிரம் யோசனைகள். இவன் இங்க இருக்கான்., இவன் கேர்ள் ஃப்ரெண்ட் அந்த கிளியோபாட்ரா எங்க போனா என்று யோசித்த படியே மொபைலை பார்த்து கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் கண் விழித்த அஜி எழும்ப முயல  அனு வேகமாக எழுந்து அவன் பின்புறம் ஒரு தலையணையை வைத்தாள்.

அவனோ அவளையும் தன் கையிலிருந்த ஊசியையும் மாறி மாறி பார்த்தவன் அனுவிடம் "நீங்க எதுக்கு என்னை ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணுனிங்க?? ஐ டோண்ட் வான் டு லிவ்" என்று கத்திவிட்டு தன் கையிலிருந்த நீடிலை வேகமாக எடுக்க முயன்றான்.

இவனுக்கு பைத்தியமா என்று கடுப்பான அனு அவனை தடுக்க முயன்று கொண்டே நர்சை அழைக்க அவர் வந்தும் அவனை கட்டுப்படுத்த முடியவில்லை.

அனு பொறுமையை இழந்து அவன் கன்னத்தில் பளாரென்று அறைந்தாள். நர்ஸை விலக சொல்லிவிட்டு அஜியை பார்த்து " பைத்தியமாடா உனக்கு?? இந்த உலகத்துல எத்தனை பேரு இன்னும் கொஞ்சநாள் வாழமாட்டோமானு யோசிச்சிட்டே செத்து போறாங்க தெரியுமா?? கடவுள் உனக்கு  எல்லா விஷயத்தையும் குடுத்தும் சாக போறேனு இவ்ளோ கலவரம் பண்ணுற?? ஒழுங்கா டிரீட்மெண்ட் முடியுறவரைக்கும் அமைதியா இருக்கனும். இல்லனா உன்னால அவி அண்ணாக்கு தான் பிரச்சனை" என்று கோபத்துடன் அவனை திட்டினாள்.

அவள் திட்டுவதை பார்த்தவன் அமைதியாகவும் நர்ஸை அனுப்பிய அனு செய்த அடுத்த காரியம் ரியாவுக்கு போன் செய்தது தான். அதற்குள் தன்னுடைய ஷிஃப்ட் ஆரம்பித்து விட்டதால் வந்த விக்னேஷ் அஜி இருந்த வார்டுக்கு வந்து சேர்ந்தான்.

அங்கே உறங்கிக் கொண்டிருந்த அஜியின் அருகில் அமர்ந்திருந்த அனுவிடம் பிரச்சனையை கேட்டவன் யோகாவை  அழைத்து விஷயத்தை கூறினான்.

இதற்கு இடையில் அவினாஷ் வந்து அஜியை பார்த்து விட்டு அவனை மாலை வீட்டுக்கு அழைத்து செல்லலாம் என்று விக்னேஷிடம் கூறிவிட்டு சரண்யாவின் எண்ணுக்கு அழைக்க அது பிஸியாக இருந்தது

கடுப்புடன் காலை கட் செய்தவன் அனுவிடம் அவனை பார்த்து கொள்ளுமாறு சொல்லிவிட்டு விக்னேஷை தன்னுடன் அழைத்து சென்றான்.

விக்னேஷிடம் தான் சரண்யாவுக்கு கால் செய்ததாகவும் அவள் எண் பிஸியாக இருந்ததையும் கூற விக்னேசிற்கு பிரச்சனையின் மூல காரணம் ஒரு வேளை அவளாக இருக்குமோ என்ற சந்தேகம்!!.

அனுவிற்கு வழக்கம் போல மாலை போன் செய்த வருண் அஜியை பற்றி அவள் கூறியதும் பதட்டத்துடன் அவினாஷின் வீட்டுக்கு சென்றான். அங்கே அவியும் விக்கியும் அவனிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருக்க அனு ஒரு மூலையில் அமைதியாக ஆனால் கடுப்பான முகத்துடன் நின்று கொண்டிருந்தாள்

நேரே விக்கியிடம் வந்தவன் அஜியை பார்த்து என்ன விஷயம் என்று கேட்க அவன் பதில் சொல்லாமல் கண்ணில் வழியுடன் வருணை பார்த்தான். வருண் ஏதோ புரிந்தது போல அவன் தோளில் தட்டி கொடுத்துவிட்டு அவன் அருகில் அமர்ந்தான்.

அடுத்த சில நிமிடங்களில் ரியா யோகாவையும் கீதாவையும் அழைத்து கொண்டு ஆட்டோவில் இறங்கினாள். வேகமாக வந்தவள் அஜியிடம் சென்று "என்னாச்சு  அஜி?? ஏன் இப்பிடி இருக்க ?? ஏதாச்சும் பிரச்சனையா?" என்று கேட்க அதற்கு மேல் பொறுக்க முடியாதவன் அவள் கையை பிடித்து அழ ஆரம்பித்து விட்டான்.

அவன் கூறிய விஷயங்களை கேட்ட அனைவருக்கும் ஒரு புறம் வருத்தமாக இருந்தாலும் ஒரு மோசமான விபத்திலிருந்து அவன் தப்பித்துவிட்டதாக நிம்மதியாகவும் இருந்தது.

சரண்யாவின் மீது கண்மூடித்தனமாக காதல் வயப்பட்ட அஜித் அவள் கூறிய விஷயங்கள் அனைத்தையும் கண்ணை மூடிக் கொண்டு நம்பினான்.அவள் ஒருநாள் தன் அண்ணனின் தோழன் என்று ஒருவனை அறிமுகப்படுத்தினாள். அவனும் அஜித் செய்துவரும் பிஸினஸை தான் செய்வதாக கூறி இருவரும் சேர்ந்து ஒரு பார்ட்னர்ஷிப் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும் என்று அவள்

கூறவே அஜியும் அதை நம்பி அவனை வொர்க்கிங் பார்ட்னராக போட்டு தன்னுடைய முதலீட்டில் ஒரு பார்ட்னர்ஷிப் நிறுமத்தை ஆரம்பித்தான்.

நன்றாக சென்றுகொண்டிருந்த தொழில் திடிரென்று படுக்க ஆரம்பிக்க , ஏனென்று விசாரித்த அஜிக்கு கிடைத்த தகவல் அவனுடைய பார்ட்னர் ஒரு ஏமாற்று பேர்வழி என்பது தான். அவன் அஜிக்கு தெரியாமல் நிறைய கிளையண்ட்ஸிடம் இருந்து கமிஷன் வாங்கியிருப்பதும் தெரிய வந்தது.

இதைப் பற்றி சரண்யாவிடம் கேட்டதற்கு அவள் சரியாக பதிலளிக்காததோடு அவனையும் அவாய்ட் பண்ண ஆரம்பிக்கவும் முதல் முறையாக அஜிக்கு அவளை காதலித்து தான் தவறு செய்து விட்டோமோ என்ற சந்தேகம் வந்தது. அன்று இரவு தான் ரியாவிடமும் அதை பகிர்ந்து கொண்டான் அவன்.

இருந்தாலும் தன் காதல் மீதிருந்த நம்பிக்கையால் சரண்யாவை பார்ப்பதற்காக அவள் வீட்டிற்கே செல்ல அங்கே சரண்யாவும் அவளது நண்பனும் பேசியதை முழுவதுமாக கேட்ட பிறகு தான் அவர்கள் திட்டம் போட்டு தன்னை ஏமாற்றியிருக்கிறார்கள் என்ற விபரம் தெரியவந்தது.

மனமுடைந்தவன் அதே எண்ணத்துடன் காரை ஓட்ட எதிரில் வந்த லாரி மீது கவனக்குறைவாக மோத இருந்தவன் ஸ்டியரிங் வீலை வளைத்து திருப்ப அது சாலையோரமாக இருந்த மரத்தில் மோதி தலையில் அடிபட்டு நினைவிழந்தான். அதன் பின் அனு அவனை பார்த்தது, ஹாஸ்பிட்டல் வந்தது முதற்கொண்டு அனுவிடம் வாங்கிய அறை வரை அனைத்தையும் ஒன்றுவிடாமல் ரியாவிடம் கூறிவிட்டு கண்ணீரை துடைத்து கொண்டான்.

அவன் கூறி முடிக்கவும் ரியா கோபமா வருத்தமா என்று தெரியாத ஒரு உணர்ச்சிகலவையில் இருந்தாள். யோகாவுக்கோ சரண்யா தன் மூலமாக தான் அஜித்திற்கு அறிமுகமானாள் என்பதால் இருமடங்கு வருத்தமும் அவமானமும்.

கீதா மட்டும் உச்சகட்ட கோபத்தில் இருந்தாள். இவ்வாறு அவர்கள் வெவ்வேறு விதமாக தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தினாலும் அதற்கு அடிப்படை அவர்கள் அனைவரும் இணைபிரியாத நண்பர்கள் என்பது தான்...

வாழ்க்கைதுணை தேர்ந்தெடுப்பதில் தவறு ஏற்பட்டால் அந்த தவறு வாழ்க்கையையே நரகமாக்கி விடும்...